★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

EELA NADU

மலர் 21 கார்த்திகை 22 முஹறம் 17 இதழ் 299

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 8-12-79

RECEIVED 1979-12-28 PERIODICALS DIVISION




நிக்கோவுக்கு வேறு கிளைகள் கிடையாது

தரத்தில் நிகரற்ற
மான், முயல், விளக்கு,
வரிக்குதிரை,
செவன மார்க்
ஓடுகளுக்கு

மு. தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

# இரணைமடுக் குளம் உடையும் அபாயம்!

## குடும்பங்களைக் காப்பாற்ற கடற்படை விரைவு!!

(யாழ்ப்பாணம்)

வடக்கில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்துவரும் பெருமழை காரணமாக கிளிநொச்சி, பூநகரி, மிருசுவில் ஆகிய இடங்களில் பெரு வெள்ளம் ஏற்பட்டு பலர் வீடுகளை இழந்து பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இரணைமடு, பல்லவராயன் கட்டுகுளம் ஆகியன உடைப்பெடுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அஞ்சப்படுகின்றது.

கடற்படைப் படகுகள் மீட்பு வேலைகளுக்காக அனுப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, பளை, சாவகச்சேரி, பூநகரி, மிருசுவில் ஆகிய இடங்களிலேயே வெள்ளம் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

### அரசாங்க அதிபர் அவசர மகாநாடு

வெள்ளப்பெருக்கு செய்தி கிடைத்ததும் யாழ் அரசாங்க அதிபர் திரு யோகேந்திர துரைசுவாமி அவசர மகாநாடு ஒன்றைக் கூட்டி சமூக சேவைகள் திணைக்களம், உணவுத் திணைக்களம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி நிவாரணப் பணிகளுக்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

### இரணைமடுக்குளம்...

இரணைமடுக்குளம் நிரம்பி சுமார் 34 அடி உயரமுள்ள அணைக்கட்டுக்கு மேலாக நீர் பாய்கிறது. இதன் காரணமாக பன்னங்கண்டியில் 10 குடும்பங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டு அக்குடும்பங்களை மீட்பதற்காக 10 கடற்படைப் படகுகள் அனுப்பப்பட்டுள்ளன.

### பல்லவராயன் குளம்

பல்லவராயன் குளமும் நிரம்பி அணைக்கட்டையும் மீறி வெள்ளம் பாய்கிறது. இதன் காரணமாக பூநகரியில் 60 குடும்பங்கள் வீடுகளை இழந்து பாடசாலை ஒன்றில் முகாமிட்டுள்ளனர். பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. செ. யோகநாதன் வெள்ள அகதிகளுக்கான உடனடி தேவைகளைக் கவனித்துவருகிறார்.

### நாகபடுவான் குளம் உடைப்பு

வரியாலை நாகபடுவான் குளம் உடைப்பெடுத்துபோக்குவரத்துக்கள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளன.

### மிரிசுவில்...

மிரிசுவிலில் 36 குடும்பங்கள் பாடசாலை ஒன்றில் புகுந்துள்ளனர்.

### மன்னூர் வீதியில் வெள்ளம் பாய்கிறது

பூநகரி-மன்னூர் வீதியில் வெள்ளம் பாய்வதால் போக்குவரத்துக்கள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளது.

### துரைசுவாமி நடவடிக்கை

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளுக்காக 50 ஆயிரம் ரூபாவை உடன் அனுப்புமாறு யாழ் அரசாங்க அதிபர் சமூக சேவை அமைச்சரை அவசரமாகக் கோரியுள்ளார்.

### வெள்ள அகதிகளுக்கு

வெள்ள அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணப் படியை உணவுப் படியையும் அதிகரிக்குமாறும் அவர்களுக்கு 2 வாரங்களுக்கான உப உணவுப் பொருட்களை வழங்க வேண்டும் என்றும் திரு துரைசுவாமி அமைச்சரைக் கேட்டுள்ளார். (இ)

நாவலர் பணி
சிறக்க எமது நல்லாசிகள்

எஸ். சின்னத்துரை
அன் பிறதர்ஸ்,
போன்: 284 யாழ்ப்பாணம்

## நாவலர் விழா

(யாழ்ப்பாணம்)

"தமிழ்ப் பாரம் பரியத்தில் நாவலர்" என்னும் ஆய்வரங்கு இன்று காலை யாழ்ப்பாணம் பல்கலைக் கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆய்வரங்குக்கு பேராசிரியர் க. கைலாசபதி தலைமை தாங்குவார்.

### பொதுக் கூட்டம்

நாவலர் நிறைவுப் பொதுக்கூட்டம் இன்று மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் திரு வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். திரு ம. ஸ்ரீசந்திரா வரவேற்புரை நிகழ்த்துவார். திரு தி. ச. வரதராசன் எழுதிய 'நாவலர் சரித்திரம்' என்னும் நூலும் வெளியிடப்படும்.

## ஈரானில் ஹப்ரிஸ் நகர் எதிர்க்கட்சி வசம்!

### பணயக்கைதிகள் விடுதலையாவர் என இரு நாட்டு அதிகாரிகளும் நம்பிக்கை

(தெஹ்ரான்)

ஈரானில் உள்நாட்டு கலவரங்களை விடுத்த பிரதான எதிர்க்கட்சிப் படைகள் வடமேற்கு மாகாணமான அஸர் பைஜானின் தலைநகர் ஹப்றிஸைக் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் மாகாண வானொலி நிலையமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதே வேளையில் பணயக் கைதிகளை விடுவிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் தோன்றியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகளும் ஈரான் வெளிநாட்டமைச்சரும் ஒரே நேரத்தில் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டமைச்சரின் கூற்று அர்த்தமற்றது என்றும் அவரது சொந்தக் கருத்தாக இருக்கலாமென்றும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதே சமயத்தில் பதவியிலிருந்து இறக்கப்பட்டதற்கு அமெரிக்காவும் ஒருகாரணம் என்று ஈரானிய ஷா பிரிட்டிஷ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். (இ)

## பிரதேச அபிவிருத்திக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள கிராமத்தொழில்களின் அபிவிருத்தி" என்னும் பொருளில் 2 நாள் கருத்தரங்கொன்று இன்று இலங்கை வங்கி மாவட்ட அலுவலகத்தில் நடைபெறுகிறது.

யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் கருத்தரங்கைத் தொடக்கி வைக்கின்றார். இலங்கை வங்கியின் பிரதேச முகாமையாளர் திரு எம். ஜே. ஏ. ஜெயநாதன் வரவேற்புரை நிகழ்த்துவார். இதனைத்தொடர்ந்து யாழ். அரசாங்க அதிபர் திரு யோகேந்திர துரைசுவாமி மாவட்ட அமைச்சர் ஆகியோர் உரையாற்றுவார்கள். (நா-கு)

## விவசாயிகள் தின விழா

(யாழ்ப்பாணம்)

கமநலசேவைத் திணைக்களமும், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹட்டன்நாஷனல் வங்கி ஆகியன இணைந்து நடாத்தும் விவசாயிகள் தின விழா, இன்றுமாலை நடைபெறவுள்ளது.

## இன்று வெகுஜன இயக்க பொதுச்சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க பொதுச்சபைக் கூட்டம், ஆனைப்பந்தி உயர் கல்விமன்றத்தில் இன்று பிற்பகல் நடைபெறும்.

இன்றைய பொதுச்சபைக் கூட்டத்தில் புதிய உத்தியோகத்தர் தெரிவும், மகாநாட்டுத் தீர்மானங்களும் அதன் நடைமுறைபற்றியும் ஆராய்தலும் இடம்பெறும்.

பிரார்த்தனை

அனைவரும் வருக! பங்கு பெறுக!

மனித உரிமைகள் தினம்
09-12-1979
பொதுக் கூட்டம்
மாலை 3 மணி
இடம்: கல்யாண மண்டபம்
உண்ணுவிரதமும் வழிபாடும்

1. நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில்
2. யாழ். ஆசனக்கோவில் (பெரிய கோவில்)
3. மௌலானுதைக்கா பள்ளிவாசல் முஸ்லிம் வட்டாரம்.

# "ஒருமைப் பாட்டை வளர்க்க பல்கலைக்கழகங்கள் உதவவேண்டும்"

## அண்ணாமலைப் பல்கலைக்கழக பொன்விழாவில் ராஷ்டிரபதி

சிதம்பரம், டிச 7


"பல்வேறு கலாசாரங்களையும் ஒன்றுபடுத்தும் உந்து சக்தியாக பல்கலைக்கழகங்கள் விளங்கவேண்டும்" என்று இந்திய ராஷ்டிரபதி டாக்டர் நீலம் சஞ்சீவரெட்டி, அண்ணாமலைப் பல்கலைக்கழக பொன் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக பொன்விழா, நேற்று முன்தினம் ஆரம்பமானது. விழா நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் தான் பாரத ராஷ்டிரபதி மேற்படி கருத்தை வெளியிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், வகுப்பு வாதம், சாதி பேதம், இனவாதங்களை எதிர்க்கும் சக்தியாகவும், பிரிவினை எண்ணங்களை ஒழித்துக்கட்டும் சக்தியாகவும், ஒருமைப்பாட்டை வளர்க்கவும் பல்கலைக்கழகங்கள் செயல்படவேண்டும் என்றும் தேசத்துக்கும், தேசப் பாதுகாப்புக்கும் பல்கலைக்கழகங்கள் அதிமுக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### இன்றைய நிகழ்ச்சி

இன்று சனிக்கிழமை இறுதி நாள் நிகழ்ச்சியின் தமிழ்நாடு மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் தலைமையில் நடைபெறும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஒய்வு பெற்ற நீதியரசர் திரு. பி. எஸ். சோமசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்துவார். செட்டிநாட்டரசரும் இணைவேந்தருமான டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார், பல்கலைக்கழக துணைவேந்தர்களின் படங்களை திரை நீக்கம் செய்துவைப்பார். இதனைத் தொடர்ந்து பரிசளிப்பு வைபவமும் கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெறும்.



தமிழிசையை வளர்க்கும் பல்கலைக்கழக இசைக்கல்லூரி

★ பல்கேரிய கப்பல் பேரம்

# குற்றச்சாட்டுகளில் உண்மை எதுவும் இல்லை!

## பல்கேரிய வர்த்தக சபைத்தலைவர் கருத்து

(புதுடில்லி)

"பல்கேரிய கப்பல்களை வாங்குவதில் பேரம் பேசப்பட்டது என்றுசுமத்தப்பட்ட குற்றச்சாட்டில் உண்மை எதுவுமே இல்லை" என்று பல்கேரிய வர்த்தகச் சபைத் தலைவர் சாண்டோதெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற வர்த்தக ஆலோசனைக்கூட்டத்தில் கலந்துகொண்ட இவரை நிருபர்கள் பேட்டி கண்டபோதே மேற்படி கருத்தை வெளியிட்டார்.

"பல்கேரிய கப்பல்களைத் தமிழக அரசு வாங்குவது சம்பந்தமாக பேரம் எதுவுமே பேசப்படவில்லை. தவிர, அப்படியான எண்ணங்கள் உருவாகக் கூடிய சூழ்நிலைகளும் ஏற்படவில்லை. இது சம்பந்தமாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் எந்தவித உண்மையும் கிடையாது; ஆதாரமற்றதுமாகும். இரண்டு அரசாங்கங்களுக்கிடையே நடைபெறும் வர்த்தகப்பேச்சு, உடன்பாடு குறித்து பகிரங்கமாக எதிர்க் கருத்துக்கள், ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவது, ஒரு நாகரிகமான பண்பாடான செயலாக மாட்டாது" என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

பல்கேரியாவிலிருந்து மூன்று கப்பல்களை வாங்குவது சம்பந்தமாக பேரம் பேசப்பட்டது என்று தமிழக அரசு மீது குற்றம் சாட்டி, இது சம்பந்தமாக நீதிவிசாரணை நடைபெற வேண்டுமென்று தமிழக சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு மு கருணாநிதி கேட்டுக் கொண்டதும், இதற்கு தமிழக முதல்வர் திரு எம் ஜி ராமச்சந்திரன் இணங்கி, நீதிபதி ஒருவர் தலைமையில் விசாரணை நடைபெறுமென்று தமிழக சட்டமன்றத்தில் ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்ததே.

நீதிவிசாரணை சம்பந்தமாக பாரதப்பிரதமர் திரு சரண் சிங்குக்கு தமிழக முதல்வர் திரு எம் ஜி ராமச்சந்திரன் கடிதம் எழுதியுள்ளார்.

# கப்பல்பேரஊழல்:

## 'சண்டே' தரும் தகவல்

சென்னை, டிச 7

கப்பல் பேர ஊழலில் ஆழம் தெரியாமல் காலைவிட்டு எம். ஜி. ஆர்: தத்தளிப்பதாக பிரபல ஆங்கில வார ஏடான "சண்டே" எழுதியிருக்கிறது.

கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு மு கருணாநிதி சுட்டிக்காட்டிய கப்பல்பேர ஊழல் விபரங்களை "சண்டே" ஏடு விபரித்துள்ளது. ராமகிருஷ்ணன் என்ற ஐ ஏ எஸ் அதிகாரியுடன் எம் ஜி ஆர் பேசியதை "டேப்" செய்து வைத்திருப்பதாக அவர் சட்ட மன்றத்தில் அறிவித்திருந்தார். அதற்குப் பிறகு, ஐ ஏ எஸ் அதிகாரிகளும், மூத்த அதிகாரிகளும் அமைச்சர்களுடன் மனந்திறந்து விவாதிப்பதற்கு யோசிப்பதாகவும் "சண்டே" ஏடு தெரிவித்திருக்கிறது.

திட்டமிட்டபடி லஞ்சம் பணம் அதிகாரிகளால் தரப்பட்டது என்று தெரிந்தும், பல்கேரியக் கப்பல்கள் வாங்குவதைத் தடுப்பதற்கு முயற்சிகள் நடைபெற்றதையும் "சண்டே" ஏடு விபரித்திருக்கிறது.

தனது 46வதுவயதில் மார்ச் மாதம் பல்கேரிய கப்பல் அதிபர் பாங்கோ காலமானார். அந்தச் சூழ்நிலை மிகுந்த நாட்களில் அவருக்கு ஏற்பட்ட அவலுக்கு மீறிய மன உளைச்சல் காரணமாகவே அவர் அகால மரணமடைந்ததாக குறிப்பிட்ட வட்டாரங்களில் பேசப்படுகிறது என்று எழுதிய 'சண்டே' ஏடு,

"தஞ்சாவூர் இடைத்தேர்தல் சமயத்தில் அன்றைய பிரதமர் திரு மொரார்ஜிதேசாய் முதலமைச்சர் எம் ஜி ஆரை மிரட்டியதாகவும், அதன் காரணமாகத்தான் எம் ஜி ஆர் இசைமாறியதாகவும் ஒரு


(7-ம் பக்கம் பார்க்க)

## ராஜ்நாராயண்-திருப்பாட்டி நேரடிப்போட்டி

புதுடில்லி, டிச 6

லோக்தள் கட்சித் தலைவர் திரு ராஜ்நாராயண் வாரணாசித் தொகுதியில் போட்டியிடுவதற்கான தமது வேட்பு மனுவை நேற்றுத் தாக்கல் செய்தார்.

அவரை எதிர்த்து இந்திரா காங்கிரஸ் சார்பில் திரு கமலபதி திருப்பாட்டி போட்டியிடுவார்.


நீங்கள் பாடுபட நெற் பீடைகள் பயன் பெறுவதா?

உங்கள் லாபத்தைக் கிருமிப் பீடைகள் பசியாற விடாமல் தடுக்க லெபேசிட் 1000 ஈ. சி. பாவியுங்கள். பரந்து பட்டுப் பல பயன் தரும் விதத்தில் செயலாற்றும் லெபேசிட் 1000 ஈ. சி. புதிய கலவை முறையில் உருவாக்கம் செய்த கிருமிநாசினித் தெளிபொருள். சந்துக்குத்தி, இலைத் தத்தி, இலை சுருட்டி, நெல் முட்டுப்பூச்சி, மற்றும் நெற் பயிர்ப்பீடைகள் அனைத்தையும் அது சிறப்பாகக் கட்டுப்படுத்தும். காய்கறி; புகையிலை, மிளகாய், தேயிலை, பழங்கள், கோப்பிப் பயிர், இவற்றைப் பாதிக்கும் கொறிக்கும் பீடைப் பூச்சி புழுக்களையும் உறிஞ்சும் கிருமிப் பீடைகளையும் கூட மிகச் சிறப்பாகக் கட்டுப்படுத்த வல்லது லெபேசிட் 1000 ஈ. சி.

இருமடங்கு வன்மை வாய்ந்த லெபேசிட் 1000 ஈ. சி. இருமடங்கு பயனை மிகச் சிக்கனச் செலவில் தருகிறது.

25 மி. லீ. லெபேசிட் 1000 ஈ. சி.— 50 மி. லீ. லெபேசிட் 50%
50 மி. லீ. லெபேசிட் 1000 ஈ. சி.—100 மி. லீ. லெபேசிட் 50%
100 மி. லீ. லெபேசிட் 1000 ஈ. சி.—200 மி. லீ. லெபேசிட் 50%

BAYER

தரமான 'ப்பாயர்' பீடை நாசினிகளைப் பாவியுங்கள்.
பயிர்களுக்குச் சிறந்தது 'ப்பாயர்' பாதுகாப்பு ஒரு 'ப்பாயர்' பீடைநாசினி

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேகெம் லிமிட்டெட் 50, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.

Mel ADS

1000 ஈ. சி.
லெபேசிட்

